DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 59/2020

Deposition of Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | Father's/Husband's Name : | ராமலிங்கம் |
| Village | : வண்டியூர் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வா.சா.ஆ.3 கிஸ்தி இரசீது 02.11.2020 மற்றும் 09.02.2026ம் தேதி செலுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தேதிகளுக்கு இடைப்பட்ட காலத்திலோ, அதற்கு முந்தைய காலக்கட்டத்திலோ செலுத்திய கிஸ்தி இரசீதுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் என் தம்பியிடம் இருக்கிறது. மேற்படி ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை என்றாலும், வழக்கிற்காக தம்பியிடம் இருப்பதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 வழக்கு தாக்கல் செய்த பிறகு வாங்கப்பட்டது என்பதால் ஏற்றுக் கொள்ளக்கூடியவை அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 பட்டாவும் வழக்கு தாக்கல் செய்த பிறகு வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 அடங்கல் கணக்கில் கிராம நிர்வாக அலுவலர் கையொப்பம் செய்து கொடுத்திருப்பதால் அதை சாட்சியாக ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. இந்த ஆவணமும் வழக்கிற்கு பின்னிட்டு உற்பத்தி செய்தவை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 04.08.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN
Digitally signed by E SUGANTHAN
Date: 2026.08.04 00:21:38 +0530

District Munsif,
Aundipatti.